# நிதித்துறை

## மானியக் கோரிக்கை எண்.16 மற்றும் 50

## அறிவிப்புகள்
## 2026-2027

**முனைவர் நெ.மரிய வில்சன்**
நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்

## 1. திறன் மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி:

அரசுப் பணியாளர்கள் தங்களது பொறுப்புகளை திறம்படவும், பயனுள்ள வகையிலும், பொறுப்புணர்வுடனும் நிறைவேற்றுவதை உறுதி செய்வதுடன், பொதுநிதி மேலாண்மையில் (Public Financial Management) ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மற்றும் புதிய தேவைகளுக்கு திறம்படச் செயலாற்றும் வகையில் அவர்களின் திறன்களை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது.

I. நிதித்துறையின் உதவிப் பிரிவு அலுவலர் (Assistant Section Officer) முதல் கூடுதல் செயலாளர் (Additional Secretary) வரையிலான அலுவலர்களுக்காக, சமகால நிதி விதிமுறைகள் மற்றும் உருவாகி வரும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான அறிவு, திறன் மற்றும் தொழில்முறைத் தகுதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஒரு திறன் மேம்பாட்டுப் பயிற்சி (Capacity Building Programme) நடத்தப்படும்.

II. கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறையில் பதவி உயர்வு பெற்ற அனைத்து உதவி கணக்கு அலுவலர்கள் (Assistant Accounts Officers) மற்றும் 2026 ஆம் ஆண்டில் பணி நியமனம் செய்யப்பட்ட கணக்காளர்களுக்கு, இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI), சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT Madras), இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் பிற புகழ்பெற்ற நிறுவனங்களின் மூலம் திறன் வளர்ப்பு, பயிற்சி மற்றும் பணியறிமுகப் பயிற்சி (Induction Training) வழங்கப்படும். இதன் மூலம் உயர் திறனும், தொழில்முறைத் திறனும், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப செயல்படும் ஆற்றலும் கொண்ட பணியாளர்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

III. தேர்ந்தெடுக்கப்பட்ட 'A ' மற்றும் 'B ' தொகுதி அலுவலர்களுக்கு (Group A and Group B Officers), இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI), கிராமப்புற மேம்பாட்டு வங்கியாளர்கள் நிறுவனம் (BIRD) போன்ற

புகழ்பெற்ற நிறுவனங்களின் மூலம் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் தணிக்கைத் துறைகளின் உள்பயிற்சி திறனை வலுப்படுத்தி, அவர்களை முதன்மைப் பயிற்றுநர்களாக (Master Trainers) உருவாக்குவது நோக்கமாகும். இந்த முதன்மைப் பயிற்றுநர்கள், மாநிலம் முழுவதும் உள்ள தணிக்கை அலுவலர்களுக்கு கட்டமைக்கப்பட்ட முறையில் பயிற்சி வழங்கி, விரிவான மற்றும் ஒருங்கிணைந்த பயிற்சி கிடைப்பதை உறுதி செய்வார்கள்.

## 2. டிஜிட்டல் உட்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் சார் கருவூலங்கள் வலுப்படுத்துதல்:

அரசின் மின் ஆளுகை முயற்சிகள், ஒவ்வொரு சார்நிலை கருவூல அலுவலகத்தை, நிர்வாக மற்றும் முடிவெடுக்கும் திறன்களுக்கு இணக்கமாகக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதன்படி, மாநிலத்தில் உள்ள சார்நிலை கருவூலங்களில் தொலைக்காட்சி, இணையப்படக்கருவி மற்றும் ஒலிபெருக்கி அமைப்பு அடங்கிய காணொளிக் கலந்துரையாடல் வசதிகள், மதிப்பிடப்பட்ட தொகையான ரூ.1.20 கோடியில் வழங்கப்படும். இந்த முன்னெடுப்பு, இயக்குநரகம் மற்றும் பிற அரசு அலுவலகங்களுடன் தடையற்ற காணொளிக் காட்சி கூட்டங்கள், பயிற்சிகள், ஆய்வுகள் மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக செயல்பாடுகளை மேம்படுத்த சாத்தியமாக்கும்; மேலும், நேரடிப் பயணங்களின் தேவையைக் குறைத்து, மாநிலம் முழுவதும் வேகமான, திறமையான மற்றும் சிறப்பான கருவூல நிர்வாகத்தை வலுப்படுத்தும்.

## 3. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்காக கணினி ஆய்வகத்தை வலுப்படுத்துதல்:

அதிகரித்து வரும் தொழில்நுட்பம் சார்ந்த நிதி நிர்வாகத்தில், அரசு அதிகாரிகளை புதிய நடைமுறைகள் மற்றும் வளர்ந்து வரும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்துகொள்ள தொடர்ச்சியான செய்முறைப் பயிற்சி அவசியமாகும். அதன்படி, கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறையின் கணினி ஆய்வகம் ரூ.30 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்படும். இது IFHRMS மற்றும் தொடர்ச்சியான தொழில்நுட்ப திறன் மேம்பாட்டிற்கு தேவைப்படும் இனங்களில் முறையான பயிற்சியை வழங்கவும், இணையவழி சேவைகளை சரியான நேரத்தில் மற்றும் திறமையாக வழங்குவதற்கு ஆதரவளிக்கவும், அதன் மூலம் ஒட்டுமொத்த நிர்வாகத் திறனையும் சேவை வழங்கலையும் மேம்படுத்த உதவும்.

## 4. திருமண முன்பணம் பெறுவதற்கான கால வரம்பில் தளர்வு:

தற்போது, அரசு ஊழியர்கள், திருமணத் தேதிக்கு 180 நாட்களுக்கு முன்பு வரை மட்டுமே திருமண முன்பணத்திற்கு விண்ணப்பிக்க முடியும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முன்பணத்தைப் பெற முடியாத தகுதியுள்ள ஊழியர்களுக்கு பயன்பெறும் வகையில், திருமணமான நாளிலிருந்து 60 நாட்கள் வரை விண்ணப்பங்களை அனுமதிக்க, தற்போதுள்ள விதிமுறை திருத்தப்படும். இந்த புதிய நடைமுறை, ஊழியர்களுக்கு கூடுதல் வசதியை வழங்குவதுடன், நடைமுறை தாமதங்கள் அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக தகுதியுள்ள ஊழியர்கள் இந்தப் பயனை இழக்காமல் இருப்பதை உறுதி செய்யும்.

## 5. கடன்கள் மற்றும் முன்பண விண்ணப்பம் மற்றும் ஒப்பளிப்பு நடைமுறைகளை எளிமையாக்குதல்:

கடன்கள் மற்றும் முன்பணங்கள் பெறும் நடைமுறைகளை எளிமைப்படுத்தி, ஊழியர்களுக்கான நலன் சார்ந்த நிதியுதவிகள் விரைவாகவும் எளிதாகவும் கிடைப்பதை உறுதி செய்ய வழிவகை செய்யப்படும். அதன்படி, கணினி முன்பணம், இருசக்கர வாகன முன்பணம் மற்றும் நான்கு சக்கர வாகன முன்பணம் பெறுவதற்கான நடைமுறைகள் எளிமைப் படுத்தப்படும். தற்போது நடைமுறையில் உள்ள பணிக்காலத் தகுதி ஆறு வருடம் என்பதிலிருந்து தளர்வுசெய்யப்பட்டு, தகுதிகாண் பருவம் முடித்த அரசு ஊழியர்களும் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்படும்.

மேலும், முன்பணம் வழங்குவதற்கான ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டு, தாமதங்கள் குறைக்கப்பட்டு, ஊழியர்கள்

எளிதாக பயன் பெறும் வகையில் செயல்முறைப்படுத்தப்படும். விண்ணப்பப் படிவங்கள் எளிமைப் படுத்தப்படும். அரசு ஊழியர்களுக்கு சொந்த வீடு வாங்குவது என்பது வாழ்நாள் கனவாகும். எனவே வீடு வாங்குவதற்கான முன்பணம் பெறுவதற்கான நடைமுறை எளிமையாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் செயல்படுத்தப்படும். மேலும் ஆய்வுப் பணிகளுக்கு மூன்றாம் தரப்பு முகவாண்மை சேவைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு குறித்து ஆராயப்படும்.

## 6. ஓய்வூதியதாரர் நேர்காணலுக்கான புதிய சுய சேவை முனையம் அமைத்தல்:

ஓய்வூதியதாரர்கள், குறிப்பாக மூத்த குடிமக்கள், அத்தியாவசிய ஓய்வூதியம் தொடர்பான சேவைகளை எளிதாகவும், கண்ணியமாகவும், சிரமமின்றியும் பெறுவதை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அதன்படி, ஓய்வூதியதாரர்களுக்கான வருடாந்திர நேர்காணல் ஒரு பாதுகாப்பான சுயசேவை வசதி மூலம் மேற்கொள்வதற்கும், டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட ஒப்புகைச் சீட்டுகளை உடனடியாக பெறுவதற்கும், ஒரு முன்னோட்ட அடிப்படையில் ஓய்வூதியதாரர் சுய சேவை முனையம் நிறுவப்படும். மேலும், சுய சேவை முனையம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். இந்த முன்னெடுப்பு, ஓய்வூதியதாரர்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய அல்லது அலுவலகங்களுக்கு பலமுறை செல்ல வேண்டிய தேவையைக் குறைப்பதோடு, ஒரு முக்கிய சேவையைப் பெறுவதில் அதிக வசதி, வெளிப்படைத்தன்மை மற்றும் எளிதான அணுகலை உறுதி செய்யும்.

## 7. பொதுவான ஆவண மேலாண்மை அமைப்பை நிறுவுதல்:

அரசாங்க செயல்முறைகளை மேலும் திறமையாகவும் வெளிப்படைத் தன்மையுள்தாக மாற்றும் பொருட்டு நகலெடுப்பினை நீக்குவதற்கும், ஆவண நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. அதன்படி, ஒரே ஆவணத்தை மீண்டும் மீண்டும் பதிவேற்றுவதைத் தவிர்த்து, அரசாணைகள், நடவடிக்கைகள், துறைசார் ஆணைகள், அனுமதி ஆவணங்கள் மற்றும் பிற துணைப் பதிவேடுகளைத் துறைகள் முழுவதும் சேமித்தல், நிர்வகித்தல், தேடுதல், பார்த்தல் மற்றும் குறிப்பிடுவதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் களஞ்சியமாக, ஒரு பொதுவான ஆவண மேலாண்மை அமைப்பு (DMS) நிறுவப்படும். இந்த நிர்வாக முன்னெடுப்பு, அதிகாரப்பூர்வ ஆவணங்களுக்கு நம்பகமான ஒரே தரவு மூலத்தை உருவாக்கும். சேமிப்பகப் பயன்பாடு

குறைப்பு, விரைவான சரிபார்ப்பு மற்றும் தணிக்கையைச் செயல்படுத்தும், மேலும் அரசாங்கத் துறைகள் முழுவதும் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புடைமையை வலுப்படுத்தும்.

## 8. புறநகர் பகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளின் (Peri Urban Village Panchayats) தணிக்கை:

கிராம ஊராட்சிகளின் தணிக்கையானது தற்போது சுழற்சி முறையில் சராசரியாக 20% வீதம் எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகள் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புறநகர் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளில் அதிக மதிப்பிலான வரவு மற்றும் செலவினங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மேற்கொள்ளப் படுகின்றன. எனினும் அவை சுழற்சி முறையில் தணிக்கைக்கு உட்படுத்தப்படு கின்றன. புறநகர் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் நிதி நிர்வாகத்தையும் பொறுப்புணர்வையும் உறுதி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள 673 புறநகர் கிராம ஊராட்சிகளின் (Peri Urban Village Panchayats) தணிக்கை ஆண்டு தோறும் வாலாய தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

## 9. செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களை CAMS வலைதளத்துடன் ஒருங்கிணைத்தல்:

ஒருங்கிணைந்த தணிக்கை மேலாண்மை முறைமை (CAMS) ஐந்து தணிக்கைத் துறைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில்நுட்பம் சார்ந்த தணிக்கை முறையை மேலும் மேம்படுத்தும் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, CAMS–உடன் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கும் பணிகள் துவங்கப்படும். இதன் மூலம் தணிக்கை நிறுவனங்களின் ERP மற்றும் CAMS வலைதள தரவுகளின் பகுப்பாய்வை வலுப்படுத்துவதற்கும், தணிக்கைக்குத் தேவையான செலவுச் சீட்டுகள்/ரசீதுகளை வகைப்படுத்தி தரவுகளை பிரிப்பதற்கும் தணிக்கையில் அதிக நிதி இழப்பை ஏற்படுத்தக்கூடிய இனங்களை அடையாளம் காண்பதற்கும் வசதிகள்

ஏற்படுத்தப்படும். மேலும், தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கைப் பத்திகளை தானியங்கி முறையில் தயாரித்தல், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தணிக்கைப் பத்தி மேலாண்மை மற்றும் தணிக்கை தொடர்பான கேள்விகளுக்கு உரிய பதில்களை வழங்குதல் ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்படும். இம்முயற்சியின் மூலம் தணிக்கைப் பணியின் செயல்திறன், துல்லியம் மற்றும் தரம் மேம்படுத்தப்படுவதுடன், தணிக்கை அலுவலர்கள் மற்றும் தணிக்கை நிறுவனங்களுக்கு பயனுள்ள தொழில்நுட்ப ஆதரவும் வழங்கப்படும்.

## 10. இலவச இணையவழிப் பயிற்சி:

தணிக்கையாளர்களின் தொழில்முறைத் திறனையும், செயல்திறனையும் மேம்படுத்தும் நோக்கில், மின்னணு கற்றல் தளத்தின் மூலம் இலவச இணையவழிப் பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலமாக தணிக்கையாளர்கள் தங்களது வசதிக்கேற்ப தொடர்ந்து தங்களது திறன்களை மேம்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

## 11. உள்ளாட்சி ஓய்வூதியதாரர்களுக்கு பிரத்யேக இணையதளம்:

தற்போது, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சுமார் 28,867 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதிய முன்மொழிவுகளை பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்கவும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் ஒரு பிரத்யேக ஓய்வூதிய இணையதளம் அறிமுகப்படுத்தப்படும். இந்த தளத்தின் மூலமாக ஓய்வூதியதாரர்கள் துறைசார் அலுவலகங்களுக்கோ அல்லது வங்கிகளுக்கோ நேரில் செல்லாமலேயே,

தங்கள் ஓய்வூதியத் தொகை வரவு வைக்கப்படுவது குறித்த தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள இயலும். மேலும், இத்தளம் பயனாளிகளுக்கு கூடுதல் வசதி, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை ஏற்படுத்துவதுடன், மேம்பட்ட சேவை வழங்கலை உறுதி செய்யும்.

## 12. CAMS கைபேசி செயலி:

ஒருங்கிணைந்த தணிக்கை மேலாண்மை முறைமையின் (CAMS) பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில், GIS அடிப்படையிலான வருகைப் பதிவு செய்தல் உள்ளிட்ட கூடுதல் வசதிகளுடன் கூடிய ஆண்ட்ராய்டு கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும். இச்செயலியின் மூலம், தணிக்கை அலுவலர்கள் தணிக்கை தடைச்சீட்டு தயாரித்தல், மாதாந்திர தணிக்கை நாட்குறிப்பு, தணிக்கைப் பணிகள் தொடர்பான முகப்புப் பலகை (Dashboard) மற்றும் CAMS தொடர்பான முக்கிய அறிவிப்புகள் (Alerts) ஆகியவற்றை எளிதாக அணுகும் வசதி ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தணிக்கை அலுவலர்கள் தங்களது தணிக்கைப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் தொடர்புடைய அறிவிப்புகளை உடனுக்குடன் அறிந்து செயல்படுவதற்கு வழிவகை செய்யப்படும்.

## 13. தணிக்கைத் துறைகளை மறுசீரமைத்தல்:

ஊழலற்ற மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க தமிழ்நாட்டை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க, நேர்மையான, மிகவும் திறன்மிக்க மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்படும் தணிக்கைத் துறைகள் அவசியமாகின்றன. இதனை உறுதி செய்யும் வகையில், மாநிலத் தணிக்கைத் துறைகளில் விரிவான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இம்மறுசீரமைப்பு நடவடிக்கையின் மூலம், தணிக்கைத் துறைகளின் எல்லைகள் தற்போதைய வருவாய் மாவட்டங்களின் எல்லைகளுடனும், தணிக்கைக்குட்படும் நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்புடனும் ஒருங்கிணைக்கப்பட்டு, தணிக்கையாளர்களின் பணிகள் சமச்சீரான முறையில் பகிர்ந்தளிக்கப்படும். இதன் விளைவாக, தணிக்கைகள் உரிய காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப்படுவதுடன், தணிக்கைச் செயல்பாடுகளின் திறன் மற்றும் தரம் மேம்படுத்தப்படும். மேலும், தணிக்கைப் பணியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பயணத் தொலைவு கணிசமாகக் குறைக்கப்படும்.

## 14. தணிக்கை குழுக்களுக்கு மின்னணு சாதனங்கள் (கைக்கணினிகள்) வழங்குதல்:

ஒருங்கிணைந்த தணிக்கை மேலாண்மை முறைமை (CAMS) மூலம், தணிக்கைப் பணிகள் பெருமளவில் மின்னணு முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதால், களத் தணிக்கையைத் திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து தணிக்கைத் துறைகளிலும் உள்ள தணிக்கைக் குழுக்கள் மற்றும் பொறுப்பு அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 1,600 கைக்கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

**முனைவர் நெ.மரிய வில்சன்**
**நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**
**அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.